வருமானவரித்துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட தொழில் அதிபர்களிடம் அதற்கு உரிய கணக்குகளை கேட்டுள்ளனர். ஆனால், உரிய கணக்குகள் இன்றி, இந்த பணம் வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த பணம் என்பது தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் கூறும்போது, "தேர்தல் நேரத்தில் பணப்பட்டுவாடாவை தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் கொடுப்பதற்காக தொழில் அதிபர்களின் வீடுகளில் பணம் பதுக்கி வைக்கப்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் நடத்தப்பட்ட சோதனைக்கு நல்ல பலன் கிடைத்து உள்ளது.

அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக பல்வேறு இடங்களை ரகசியமாக கண்காணித்து வருகிறோம்" என்று தெரிவித்தனர்.

தென்காசி, திருப்பூர், செய்யாறு உள்ளிட்ட இடங்களிலும் வருமானவரித்துறை அதிகாரிகள் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். இது போன்ற சோதனைகள் வரும் நாட்களில் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Rs. 4 Crore seized by Income Tax department

தினத்தந்தி
- 4 APR 2024

# பிரதமர் மோடி படம் அச்சடித்த 40 ஆயிரம் டி-சர்ட், 1,800 சேலைகள்

## 2 லாரிகளுடன் பறிமுதல்

ராஜபாளையம், ஏப்.4-
விருதுநகர் மாவட்டம் ராஜ பாளையம் அருகே தென்காசி சாலையில் அசையாமணி விலக்கு பகுதியில் தேர்தல் கூடுதல் கண்காணிப்பு குழுவினர் வாகன சோதனை நடத்தினர். அப்போது கர்நாடகா பதிவு எண் கொண்ட 2 லாரிகளை நிறுத்தி விசாரணை செய்தனர்.

பெங்களூருவில் இருந்து கேரளா செல்வதாக லாரி டிரை வர்கள் சதீஷ், நவீன் குமார் ஆகியோர் கூறினர். தொடர்ந்து லாரிகளில் சோதனை செய்த போது பிரதமர் மோடி படம் அச்சடித்த 40,500 டி-சர்ட்டுகள் மற்றும் தாமரை சின்னம் பொறித்த 1,800 சேலைகள் இருந்தது தெரிய வந்தது.

இதற்கு எந்த ஆவணங்களும் இல்லாததால், பல லட்சம் மதிப்பிலான துணி பண்டல்களுடன் 2 லாரிகளையும் அதி காரிகள் பறிமுதல் செய்தனர்.

40000 T-shirts and 1800 Sarees printed with PM Moodi picture were seized.

தினத்தந்தி
4 APR 2024

# கருத்துக் கணிப்புகளை வெளியிட கட்டுப்பாடுகள்

## தேர்தல் கமிஷன் அறிவிப்பு

சென்னை, ஏப்.4-

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

தமிழ்நாட்டில் நாடாளுமன்ற தேர்தல்கள் மற்றும் விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற 19-ந் தேதியன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெறும். எனவே வாக்குப்பதிவுக்கு முந்தைய அல்லது பிந்தைய கருத்துக் கணிப்புகளின் முடிவுகளை வெளியிடுவதற்கான கட்டுப்பாடுகளை இந்திய தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ளது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி, குறிப்பிட்ட காலக்கட்டத்தில் வாக்குப்பதிவிற்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை நடத்துவதோ மற்றும் அதை அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் மூலமாக யாரும் வெளியிடக்கூடாது. அல்லது, வேறு எதாவது முறையில் பரப்பக்கூடாது.

ஒரு பொதுத் தேர்தலின்போது, வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வாக்குப்பதிவு முடிந்த பின்பு அரை மணிநேரம் வரை கருத்துக் கணிப்பிற்கான தடை தொடரும்.

பல இடைத் தேர்தல்கள் வெவ்வேறு நாட்களில் ஒன்றாக நடைபெற்றால், முதல் கட்ட வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல், கடைசிக்கட்ட வாக்குப்பதிவு முடிந்த அரைமணி நேரம் வரை தடை தொடரும்.இந்த விதிமுறைகளை மீறினால், 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து விதிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

EC banned from publishing survey regarding result

தினத்தந்தி

- 4 APR 2024



சிதம்பரத்தில்

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வத்தின் காரை மறித்து பறக்கும் படையினர் சோதனை

சிதம்பரம், ஏப்.4-

கடலூர் மாவட்டம் சிதம்பரம் நாடாமன்ற தொகுதியில் போட்டியிடும் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன், மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் சுதா ஆகியோரை ஆதரித்து, சிதம்பரம் அருகே லால்புரத்தில் நாளை மறுநாள் (6-ந்தேதி) தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இதில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு, ஆதரவு திரட்டி பேச உள்ளார்.

இதற்கான பிரசார மேடை அமைக்கும் பணி லால்புரத்தில் நடைபெற்று வருகிறது. இந்த பணியை பார்வையிடுவதற்காக தி.மு.க. மாவட்ட செயலாளரும், அமைச்சருமான எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் நேற்று மதியம் சென்றார். அப்போது, அவர் மணலூர் அருகே புறவழிச்சாலையில் சென்றபோது, தேர்தல் பறக்கும் படை குழுவினர், அமைச்சரின் காரை வழிமறித்து சோதனையிட்டனர்.

கார் முழுவதும் அவர்கள் சோதனை செய்த நிலையில், பணம், பரிசு பொருட்கள் என்று எதுவும் சிக்கவில்லை. இதையடுத்து, அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அங்கிருந்து காரில் புறப்பட்டு, லால்புரத்தில் மேடை அமைக்கும் பணி நடைபெறும் இடத்துக்கு சென்றார்.

Flying Squad Team raided the Minister MRK Paneerselvam car

தினமலர்
4 APR 2024

# தலைமை செயலர்களுக்கு தேர்தல் கமிஷனர் உத்தரவு

**புதுடில்லி, ஏப். 4–** நாடு முழுதும் லோக் சபா தேர்தலை திட்டமிட்டப்படி அமைதியான முறையில் நடத்த வழி வகுக்குமாறு அனைத்து மாநில தலைமைச் செயலர்கள், டி.ஜி.பி.,க்கள் உட்பட மத்திய பாதுகாப்பு படையினருக்கும் தலைமை தேர்தல் கமிஷன் அறிவுறுத்தியுள்ளது.

லோக்சபா தேர்தல் நெருங்கும் நிலையில் சட்டம் – ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தலைமை தேர்தல் கமிஷனர் ராஜிவ் குமார் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நேற்று டில்லியில் நடந்தது.

இந்த கூட்டத்தில் முப்படை தளபதிகள், மாநில தலைமைச் செயலர்கள், டி.ஜி.பி.,க்கள் உள்ளிட்டோர், 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக பங்கேற்றனர்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் தலைமை தேர்தல் கமிஷனர் ராஜிவ் குமார் கூறியதாவது:

தேர்தல் பணிகள் சுமுகமாக நடக்க, அண்டை மாநிலங்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். இதேபோல், எல்லைப் பகுதிகளில் மட்டுமின்றி, பதற்றமான ஓட்டுச்சாவடிகளை கண்டறிந்து அங்கும் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும்.

மாநில மற்றும் சர்வதேச எல்லைகளின் வாயிலாக போதைப்பொருட்கள், மதுபானங்கள், ஆயுதங்கள், வெடிப்பொருட்கள் நடமாட்டத்தை தடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

CEC conducted VC with CEO, TN, CS TN Govt. and Senior officials regarding Poll preparedness

தினமலர்
- 4 APR 2024

# 485 பேரின் ஓட்டு 'மிஸ்ஸிங்': வாக்காளர்கள் அதிர்ச்சி

**திருவொற்றியூர், ஏப். 4–**

திருவொற்றியூர் மேற்கு, சார்லஸ் நகரில், நான்கு தெருக்கள் உள்ளன. இப்பகுதி, 163 – 164 என, இரு ஓட்டுச்சாவடி மையங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 163வது ஓட்டுச்சாவடியில் 911 ஓட்டுகளும்; 164ல், 1,200 ஓட்டுகளும் உள்ளன.

இந்நிலையில், இப்பகுதியில், 40 ஆண்டுகளுக்கும் மேலாக சொந்த வீடுகளில் வசிக்கும் பலருக்கும் வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டுள்ளது.

பெயர் விடுபட்ட 50க்கும் மேற்பட்டோர், சார்லஸ் நகர், தேவி கருமாரியம்மன் கோவில் முன் நேற்று கூடி, தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டோர் கூறியதாவது:

கடந்த கவுன்சிலர் தேர்தலில் ஓட்டளித்த பலரது பெயர், இந்த தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில் விடுபட்டுள்ளது. அதன்படி, 485 பெயர்கள் விடுபட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

இதுகுறித்து, மண்டல தேர்தல் அலுவலகத்தை அணுகினால், அதிகாரிகள் அலைக்கழிக்கின்றனர். இரு தினங்களில் இதற்கு முடிவு காணாவிட்டால், தேர்தலை புறக்கணிப்போம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

Names of 485 people missing from the voter list in Tiruvottur area

தினமலர்

4 APR 2024

# பறக்கும் படை சோதனையில் ரூ.8.78 கோடி நகை சிக்கியது

**ராசிபுரம், ஏப். 4–**

நாமக்கல் மாவட்ட எல்லையில், மல்லூர் அருகே, சேலம் – நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையில், அதிகாரி செங்கோட்டுவேல் தலைமையிலான பறக்கும் படையினர், நேற்று காலை வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அந்த வழியாக சென்ற, 'பி.வி.சி., லாஜிஸ்டிக்ஸ்' என்ற பார்சல் சர்வீஸ் வேனை நிறுத்தி சோதனையிட்டனர். அதில், சேலத்தில் உள்ள பல்வேறு நகை கடைகளில் இருந்து தங்கம்; வெள்ளி நகைகளை எடுத்துக்கொண்டு, மதுரைக்கு செல்வது தெரிய வந்தது. இதையடுத்து, அந்த வாகனத்தையும், நகைகளையும் பறிமுதல் செய்து, ராசிபுரம் தாசில்தார் அலுவலகத்தில், ஏ.ஆர்.ஓ., முத்துராமலிங்கத்திடம் ஒப்படைத்தனர்.

பார்சல்களை பரிசோதனை செய்தபோது, 8.78 கோடி ரூபாய் மதிப்பிலான, 13 கிலோ தங்கம், 33 கிலோ வெள்ளி ஆபரணங்கள் இருந்தன.

ஆனால், அவற்றுக்கு முறையான ஆவணங்கள் இல்லாததால், மாவட்ட வருமான வரித்துறை அலுவலகத்திற்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள் விசாரிக்கின்றனர். நகைகள் சரிபார்க்கப்பட்டு, ராசிபுரம் கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டன.

~~Rs~~ Value of Rs. 8.78 Crore Seized ~~th~~ by the Flying Squad team.

தினமலர்
4 APR 2024

# ரூ.141.31 கோடி பொருட்கள் பறிமுதல்

சென்னை, ஏப். 4–

தமிழகத்தில் நேற்று காலை வரை, 141.31 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கப்படுவதை தடுக்க, தேர்தல் கமிஷன் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மாநிலம் முழுதும் வாகன சோதனை தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. வருமான வரித்துறை அதிகாரிகளும், ஆங்காங்கே சோதனை நடத்தி வருகின்றனர்.

நேற்று காலை வரை, 62.59 கோடி ரூபாய் ரொக்கம், 3.68 கோடி ரூபாய் மதுபானம், 74 லட்சம் ரூபாய் போதைப்பொருள், 59.42 கோடி ரூபாய் தங்கம், வெள்ளி நகைகள், 14.88 கோடி ரூபாய் இலவச பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மொத்த மதிப்பு 141.31 கோடி ரூபாய்.

The total value of Rs. 141.31 Crore of goods seized in Tamil Nadu upto date.

தினமலர்
4 APR 2024

## புகார் அளிக்க எண் வெளியீடு

தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தது முதல், பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு சோதனை நடந்து வருகிறது.

அதன்படி, சென்னையில் இதுவரை 5.52 கோடி ரூபாய் மதிப்பிலான 8,589.16 கிராம் தங்கம்; 3.63 கோடி ரூபாய்; 15 லட்சம் ரூபாய் மதிப்பில் 12 ஐ போன்கள்; 7.50 லட்சம் ரூபாய் மதிப்பில் 25 மடிக்கணினிகள்; 14.17 லட்சம் ரூபாய் மதிப்பில் 131 கிலோ போதை பொருட்கள்; 1,624 லிட்டர் மதுபானம் என, 9.90 கோடி ரூபாய் மதிப்பில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பொது இடங்களில் தேர்தல் நடத்தை விதிமுறை மீறல்கள் தொடர்பாக ஒன்பது வழக்குகள்; தனியார் இடங்களில் தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பாக இரண்டு வழக்குகள்; விதிமீறல்கள் தொடர்பாக 10 வழக்குகள் என, 21 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் நடத்தை விதிமீறல்கள் தொடர்பாக, 1950; 1800 425 7012; 044 – 2533 3001; 2533 3003; 2533 3004; 2533 3005; 2533 3006 ஆகிய எண்களில், பொதுமக்கள் புகார் அளிக்கலாம்.



ராதாகிருஷ்ணன்
சென்னை மாவட்ட
தேர்தல் அலுவலர்

Complaint number issued regarding MCC violation

தினமணி
- 4 APR 2024

வாக்குப் பதிவு ஏற்பாடுகள்

# தமிழக அரசுடன் தேர்தல் ஆணையம் ஆலோசனை



மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவு ஏற்பாடுகள் தொடர்பாக இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் தலைமையில் காணொலி மூலம் சென்னையில் புதன்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு, உள்துறை செயலர் பெ.அமுதா, காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் உள்ளிட்ட உயர் அலுவலர்கள்.

சென்னை, ஏப். 3: மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவு ஏற்பாடுகள் குறித்து, தமிழக அரசுடன் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் புதன்கிழமை ஆலோசனை நடத்தியது. தில்லியில் இருந்து காணொலி வழியாக இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் ஆலோசனை நடத்தினார்.

அப்போது, வாக்குப் பதிவுக்காக செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள், பணப் புழக்கத்தை கட்டுப்படுத்துவதற்கான சிறப்பு நடவடிக்கைகள் குறித்து தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்கள் அறிவுறுத்தினர்.

அத்துடன், அரசின் சார்பில் செய்யப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் பற்றி தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா விளக்கியதாக அரசுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டத்தில் தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு, உள்துறை செயலர் .பெ.அமுதா, காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

CEC Rajiv kumar held a meeting via video conferencing with CEO TN, CS TN Govt. DGP and senior officials on the election preparedness.

தினமணி

4 APR 2024

# சி-விஜில் செயலியில் இதுவரை 1,694 புகார்கள்

## கரூர் முதலிடம் – 2 மாவட்டங்களில் புகார்களே இல்லை

சென்னை, ஏப். 3: தேர்தல் நடத்தை விதிகளை மீறுவது தொடர்பாக புகார்களைத் தெரிவிப்பதில் கரூர் மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. 2 மாவட்டங்களில் இருந்து எந்தப் புகாரும் வரவில்லை என்று தேர்தல் ஆணையத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் நடத்தை விதிகளை மீறும் நிகழ்வுகளை புகைப்படம் அல்லது விடியோ பதிவு செய்து, கைப்பேசி செயலியான சி-விஜில் மூலமாக அனுப்பலாம். இதில் அனுப்பக்கூடிய புகார்கள், தகவல்கள் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அதிகாரி அல்லது உதவித் தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு அனுப்பப்படும். அவர்கள் புகாரின் உண்மைத் தன்மை குறித்து ஆராய்வர். அந்த வகையில், புதன்கிழமை காலை நிலவரப்படி, அதிக அளவு புகார்கள் பெறப்பட்ட மாவட்டமாக கரூர் உள்ளது. இந்த மாவட்டத்தில் இருந்து வரப்பெற்ற புகார்களில் 372 உண்மைத் தன்மையுடவை எனக் கண்டறியப்பட்டுள்ளன. இதற்கடுத்த இடத்தில் சென்னை மாவட்டம் உள்ளது. இந்த மாவட்டத்தில் 3 மக்களவைத் தொகுதிகள் அடங்கியுள்ள சூழ்நிலையில், 209 புகார்கள் சரியானவை எனத் தெரியவந்துள்ளது. இந்தப் புகார்கள் அடுத்தகட்ட நடவடிக்கைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தமிழக தேர்தல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

3-ஆவது இடத்தில், வேலூர் மாவட்டம் உள்ளது. இந்த மாவட்டத்தில் இருந்து சரியான தன்மையுடன் 116 புகார்கள் பெறப்பட்டுள்ளன.

**இதுவரை புகாரே இல்லை:** கரூர், சென்னை, வேலூர் போன்ற மாவட்டங்கள் முதல் 3 இடங்களில் இருந்தாலும், ஒரு சில மாவட்டங்களில் இருந்து சரியான ஆதாரங்களுடன் புகார்களே வரவில்லை என்று தமிழக தேர்தல் துறை தெரிவித்துள்ளது.

குறிப்பாக, திருவாரூர், மயிலாடுதுறை போன்ற மாவட்டங்களில் இருந்து ஒருசில புகார்கள் வரப்பெற்றாலும் அவை உரிய ஆதாரங்களுடன் இல்லாத காரணத்தால் கைவிடப்பட்டுள்ளன. ஆகவே, இந்த இரு மாவட்டங்களும் புகார்களே பதிவாகாத மாவட்டங்களாக உள்ளன என்று தமிழக தேர்தல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மாவட்ட வாரியாக உறுதிப்படுத்தப்பட்ட புகார்களின் எண்ணிக்கை**
(புதன்கிழமை காலை நிலவரம்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரியலூர் | 3 | மதுரை | 52 | தேனி | 7 |
| செங்கல்பட்டு | 43 | மயிலாடுதுறை | 0 | திருவள்ளூர் | 53 |
| சென்னை | 209 | நாகப்பட்டினம் | 26 | திருவாரூர் | 0 |
| கோவை | 86 | நாமக்கல் | 77 | தூத்துக்குடி | 43 |
| கடலூர் | 12 | பெரம்பலூர் | 5 | திருச்சி | 61 |
| தருமபுரி | 16 | புதுக்கோட்டை | 6 | திருநெல்வேலி | 88 |
| திண்டுக்கல் | 19 | ராமநாதபுரம் | 14 | திருப்பத்தூர் | 84 |
| ஈரோடு | 13 | ராணிப்பேட்டை | 27 | திருப்பூர் | 19 |
| கள்ளக்குறிச்சி | 11 | சேலம் | 34 | திருவண்ணாமலை | 16 |
| காஞ்சிபுரம் | 90 | சிவகங்கை | 3 | வேலூர் | 116 |
| கன்னியாகுமரி | 18 | தென்காசி | 33 | விழுப்புரம் | 7 |
| கரூர் | 372 | தஞ்சாவூர் | 36 | விருதுநகர் | 7 |
| கிருஷ்ணகிரி | 16 | நீலகிரி | 4 | மொத்தம் | 1,694 |

There are 1694 complaints received through c-vigil

தினமணி

4 APR 2024

# தமிழகத்தில் தேர்தல் பறக்கும் படைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

**சென்னை, ஏப். 3:** தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான சோதனைகளைத் துரிதப்படுத்தும் வகையில், கண்காணிப்பு, நிலைக் குழுக்கள், பறக்கும் படைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.

தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்து தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அவர் புதன்கிழமை அளித்த பேட்டி:

மக்களவைத் தொகுதிகளுக்குள்பட்ட பேரவைத் தொகுதிகளில் உரிய ஆவணங்கள் இல்லாமல் பணம், பரிசுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பணியில் பறக்கும் படைகளும், நிலைக் குழுக்களும் ஈடுபட்டு வருகின்றன.

ஒரு பேரவைத் தொகுதிக்கு 3 குழுக்கள் வீதம் 702 பறக்கும் படைகளும், 702 நிலைக் குழுக்களும் பணியில் ஈடுபட்டு வந்தன. இப்போது 906 நிலைக் குழுக்கள், 893 பறக்கும் படைக் குழுக்கள் என அவற்றின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டுள்ளது. சட்டப்பேரவைத் தொகுதிகளுக்குள் நடைபெறும் அனைத்தையும் விடியோ பதிவு செய்வதற்காக 254 குழுக்கள் தனியாக பணியில் ஈடுபட்டு வருகின்றன.

மக்களவைத் தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள பார்வையாளர்களின் ஆலோசனைகளைப் பெற்று கண்காணிப்புக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

**கலைஞர் உலகத்தில் காட்சி:** நடத்தை விதிகள் அமலில் உள்ளதால், தேர்தலுக்குப் பிறகு சென்னை மெரினாவில் உள்ள கலைஞர் உலகத்தைத் திறக்க வேண்டுமென தமிழக தேர்தல் துறையிடம் மனு அளிக்கப்பட்டது. அதன்படி, கலைஞர் உலகத்தில் நடைபெற்று வந்த ஒலி-ஒளி காட்சி நிறுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் பாதுகாப்புப் பணிக்காக துணை ராணுவ படைகளைச் சேர்ந்த 190 குழுக்கள் வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்பாகவே 25 குழுக்கள் வந்தன. ஏப்.2-ஆம் தேதி நிலவரப்படி 165 குழுக்களும் தமிழகம் வந்துள்ளன. அவர்களுக்கான பணி ஒதுக்கீடுகளை சட்டம் - ஒழுங்கு நிலையைக் கண்காணிக்கும் காவல் துறை உயரதிகாரி ஜெயராம் மேற்கொள்வார்.

**சிக்கலான - பதற்றமான சாவடிகள்:** மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கு நிலைக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான வாக்குச் சாவடிகள், சிக்கலான மற்றும் பதற்றமான சாவடிகளாக கண்டறியப்படுவது வழக்கம். காவல் துறை உள்பட பல்வேறு துறைகளிடம் இருந்து கிடைக்கப் பெறும் அறிக்கைகளின் அடிப்படையில், சிக்கலான மற்றும் பதற்றமான வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை ஓரிரு நாள்களில் முடிவு செய்யப்படும்.

தமிழகத்திலுள்ள 68,000-க்கும் அதிகமான வாக்குச் சாவடிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர், நிழற்பந்தல், நாற்காலிகள் அமைக்கப்பட்டிருக்கும். இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**பெண் ஊழியர்கள்:** மக்களவைத் தேர்தல் பணியில் ஈடுபடும் ஊழியர்களில் 60 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் பெண்களாக உள்ளனர். எனினும், தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியபடி, மக்களவைத் தொகுதிக்கு உள்பட்ட ஒரு சட்டப் பேரவைத் தொகுதியின் ஒரு வாக்குச் சாவடியில் தேர்தலை நடத்தும் ஊழியர்கள் முழுவதும் பெண்களாக இருப்பர். இதேபோன்று, ஒரு வாக்குச் சாவடியில் தேர்தல் பணியை முற்றிலும் மாற்றுத்திறனாளிகளாகவே மேற்கொள்வர்.

இளம்தலைமுறையாக உள்ள அரசு ஊழியர்களைக் கொண்ட வாக்குச் சாவடிகள் மாவட்டத்துக்கு ஒன்று வீதம் அமைக்கப்படும். ஆனால், இந்த ஏற்பாடுகள் அனைத்தும் தேர்தல் பணியில் இருக்கக் கூடிய ஊழியர்களின் எண்ணிக்கை அளவைப் பொருத்தே செய்யப்படும் என்று அவர் தெரிவித்தார்.

The number of flying squad team increased in Tamil Nadu

தினமணி
4 APR 2024

# தேர்தல் நடத்தை விதிமீறல்: 21 வழக்குகள் பதிவு

சென்னை, ஏப். 3: தேர்தல் நடத்தை விதிமீறல் தொடர்பாக 21 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மாநகராட்சி சார்பில் புதன்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

சென்னை மாவட்டத்துக்குள்பட்ட மக்களவைத் தொகுதிகளில் தேர்தல் நடத்தை விதிமுறைகளின்படி பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதில், கடந்த 18 நாள்களில் மட்டும் பொது இடங்களில் விதிகளை மீறி ஒட்டப்பட்ட 63,482 சுவர் விளம்பரங்கள், 14,237 சுவரொட்டிகள், 608 பதாகைகள், 2,050 இதர வகை விளம்பரங்கள் என மொத்தம் 80,377 விளம்பரங்கள் அகற்றப்பட்டுள்ளன.

மேலும், தனியார் இடங்களில் இருந்த 5,643 சுவர் விளம்பரங்கள், 7,974 சுவரொட்டிகள், 612 பதாகைகள் மற்றும் 1,160 இதர வகை விளம்பரங்கள் என 15,389 விளம்பரங்கள் அகற்றப்பட்டுள்ளன.

இதுவரை தேர்தல் பறக்கும் படை, நிலை கண்காணிப்புக் குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட ரூ. 5.62 கோடி மதிப்பிலான 8,589.16 கிராம் தங்கம், ரூ. 3.,63 கோடி ரொக்கம், 12 'ஐ-போன்கள்' (ரூ. 15 லட்சம்), 25 மடிக்கணினிகள் (ரூ.7.50 லட்சம்) பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமில்லாமல் ரூ.14.16 லட்சம் மதிப்பிலான 131.6 கிலோ போதைப் பொருள்கள், ரூ.28.74 லட்சம் மதிப்பிலான 1,624.28 லிட்டர் மதுபானம் என மொத்தம் ரூ. 9.90 கோடி மதிப்பிலான பொருள்களை பறக்கும் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இதுவரை, தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறல்கள் தொடர்பாக 21 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் தேர்தல் நடத்தை விதிமீறல்கள் தொடர்பான புகார்களை 1950 மற்றும் 1800 425 7012 என்ற எண்களிலும், சி-விஜில் செயலி மூலமாகவும் தெரிவிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாடு முழுவதும் வேட்பாளர்களின் தேர்தல் செலவினப் பணிகளைப் பார்வையிட சிறப்பு செலவினப் பார்வையாளராக பி.ஆர்.பாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரை 93452 98218 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

21 cases filed regarding MCC violation.

தினமணி
- 4 APR 2024

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் அமைப்பு முறையை மாற்ற வேண்டும்

## தேர்தல் ஆணையத்துக்கு திமுக மீண்டும் கோரிக்கை

சென்னை, ஏப். 3: வாக்குச் சாவடிகளில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களின் அமைப்பு முறையை மாற்ற வேண்டுமென தேர்தல் ஆணையத்துக்கு திமுக மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ள நிலையில், கட்சியின் அமைப்புச்செயலர் ஆர்.எஸ். பாரதி சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடந்த மக்களவைத் தேர்தலில், சிதம்பரம் தொகுதியில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் 3 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றார். இதே போன்று, கடந்த தேர்தல்களில் கட்சியின் சில வேட்பாளர்களும் குறைந்த வாக்குகள் வித்தியாசத்திலேயே வெற்றி பெற்று இருக்கிறார்கள். ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும், வாக்குப் பதிவு முடிந்ததும், படிவம் 17-சி பயன்படுத்தப்படும். அதாவது, ஒரு வாக்குச்சாவடியில் எத்தனை வாக்குகள் பதிவானது என்பது அந்த படிவம் 17-சி-இல் தெரிவிக்கப்பட்டிருக்கும். ஆனாலும், வாக்கு எண்ணப்படும்போது ஒவ்வொரு இயந்திரத்திலும் 50 முதல் 60 வாக்குகள் கூடுதலாக வருகிறது.

17-சி படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைக்கும், வாக்குப்பதிவு இயந்திரத்தில் உள்ள எண்ணிக்கைக்கும் வேறுபாடு இருக்கும். இதனால், கட்சிகளின் முகவர்களுக்கு இடையே பிரச்னை வரும்.

**நியாயமான சந்தேகம்:** வாக்குப் பதிவுக்கு முன்பாக மேற்கொள்ளப்படும் மாதிரி வாக்குப் பதிவின் வாக்குகளும் இயந்திரத்தில் பதிவாகி விட்டதாகக் கூறும் தேர்தல் அதிகாரிகள், அந்த வாக்குகளை கழித்து விடுவதாகத் தெரிவிப்பர். இதுபோன்ற தவறுகளை, தேர்தல் ஆணையம் நிவர்த்தி செய்யவில்லை. இதனால்தான் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மீது அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் நியாயமான சந்தேகம் வந்திருக்கிறது. இந்த சந்தேகத்தைப் போக்க வேண்டியது தேர்தல் ஆணையத்தின் கடமை என்று ஆர்.எஸ்.பாரதி கூறினார்.

இதைத் தொடர்ந்து, திமுக எம்.பி. என்.ஆர். இளங்கோ கூறியதாவது:

வாக்குச் சாவடிகளில் கட்டுப்பாட்டு இயந்திரத்தில் இருந்து நேரடியாக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்துக்கு செல்லாமல் விவிபேட் (வாக்கை உறுதி செய்யும் இயந்திரம்) இயந்திரத்தின் வழியாகச் செல்கிறது. அது இயற்கையாக சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. பழைய முறையில், விவிபேட் இயந்திரம் கடைசியாகவே வைக்கப்பட்டிருந்தது.

இப்போது புதிய நடைமுறை பின்பற்றப்படுகிறது. அது தவறு. தேர்தலை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்துவதற்கு என்னென்ன வழிகள் உள்ளனவோ, அதை வழக்குகள் மூலமாக செய்வது அரசியல் கட்சியினுடைய கடமை. அதை திமுக செய்து வருகிறது என்றார்.

DMK requested the ECI to change the system of EVM

தினமணி

4 APR 2024

# ஆவணமின்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.2.50 லட்சம் சில்லறை காசுகள் பறிமுதல்

**சென்னை, ஏப். 3:** சென்னை மண்ணடியில் ஆவணமின்றி கொண்டு செல்லப்பட்ட ரூ. 2.50 லட்சம் சில்லறை காசுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

மண்ணடி ராஜாஜி சாலையில் தேர்தல் பறக்கும் படையினர் செவ்வாய்க்கிழமை இரவு வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்கு மோட்டார்சைக்கிளில்வந்தமயிலாப்பூரைச் சேர்ந்த சீனு, முருகேசன் ஆகிய 2 பேரை நிறுத்தி சோதனையிட்டனர். அதில், அவர்கள் வைத்திருந்த நாணயங்களாக ரூ. 2.50 லட்சம் வைத்திருந்தனர். அதற்குரிய ஆவணங்கள் அவர்களிடம் இல்லாததால், அந்த சில்லறை காசுகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

விசாரணைக்கு பின்னர் அந்த சில்லறை காசுகளை அரசு கருவூலத்தில் பறக்கும் படையினர் ஒப்படைத்தனர்.

An amount of Rs. 2.50 lakh seized in Chennai carried without proper document.

தினகரன்
4 APR 2024

### தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து

# தலைமை செயலாளர், டிஜிபியுடன் தலைமை தேர்தல் ஆணையர் ஆலோசனை



▶ இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் தலைமையில் காணொலி வாயிலாக மக்களவைத் தேர்தல் ஆலோசனைக்கூட்டம் நேற்று நடந்தது. இதில் சென்னை தலைமை செயலகத்திலிருந்து தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா, தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு, உள்துறை முதன்மை செயலாளர் பெ.அமுதா, டிஜிபி சங்கர் ஜிவால் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர்.

சென்னை, ஏப். 4: இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் அனைத்து மாநில தலைமை செயலாளர், டிஜிபி ஆகியோருடன் நேற்று மாலை 4 மணிக்கு வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டத்தில் தமிழகம் சார்பாக தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா, உள்துறை செயலாளர் அமுதா, டிஜிபி சங்கர்ஜிவால், போலீஸ் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் ஏடிஜிபி ரூபேஷ்குமார் மீனா, ஏடிஜிபி மகேஷ் குமார் மற்றும் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தேர்தலுக்கு இன்னும் 16 நாளே உள்ள நிலையில் நேற்று நடைபெற்ற ஆலோசனை கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. தமிழகத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து நேற்று (2ம் தேதி) வரை சுமார் ₹130 கோடி மதிப்பிலான பணம், நகை, பரிசு பொருட்களை தேர்தல் பறக்கும் படை, நிலை கண்காணிப்பு குழு, வருமான வரித்துறையினர் கைப்பற்றியுள்ளனர். இது குறித்து நேற்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

### எல்லைகளை தீவிரமாக கண்காணிக்க உத்தரவு

மேலும், தமிழகம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் வாக்குப்பதிவை அமைதியாகவும், பாதுகாப்பாகவும் நடத்துவது, பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்டறிந்து கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்வது, வாக்குப்பதிவின் போது ஒப்புகை சீட்டை எப்படி எண்ணுவது, பிரசாரத்தின்போது மத உணர்வுகளை தூண்டியவர்கள் மற்றும் மற்றவர்களை பற்றி வெறுப்பாக பேசுபவர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை, சி-விஜில் ஆப் மூலம் பொதுமக்கள் தெரிவிக்கும் புகார் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுப்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது. நாடு முழுவதும் 7 கட்டங்களாக தேர்தல் நடைபெறுவதால், ஒரு மாநிலத்தில் இருந்து மற்ற மாநிலத்துக்கு பணம் கொண்டு செல்வதை தடுக்க எல்லை பகுதிகளை தீவிரமாக கண்காணிக்க இந்திய தலைமை தேர்தல் ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

CEC Rajiv Kumar held a meeting via video conferenceing with CEO, TN, CS to Govt. DGP and Senior officials on the Election preparedness.

தினகரன்
4 APR 2024

### ஏப்ரல் 19 முதல் ஜூன் 1 மாலை 6.30 மணி வரை

# கருத்துக்கணிப்பு வெளியிட தேர்தல் ஆணையம் தடை

சென்னை, ஏப்.4: வருகிற 19ம் தேதி காலை 7 மணியிலிருந்து ஜூன் 1 மாலை 6.30 மணி வரை தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பு வெளியிட தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது. மீறினால் 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாகு வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாடு மக்களவைப் பொதுத்தேர்தல்கள் மற்றும் விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஏப்.19ம் தேதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். வாக்குப்பதிவிற்கு முந்தைய, பிந்தைய கருத்துக் கணிப்புகளின் முடிவுகளை வெளியிடுதலுக்கும் பரப்புதலுக்கும் பின்வரும் வரையறைகள் பொருந்தும் என இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951, பிரிவு 126ஏ விதிகளின்படி, யாதொரு நபரும் வாக்குப்பதிவிற்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை நடத்துவதோ மற்றும் அதனை அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் வாயிலாக வெளியிடுவதோ அல்லது வேறு ஏதேனும் முறையில், அது எதுவாயினும், பரப்பவோ கூடாது என்று இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஒரு பொதுத்தேர்தலின் போது, வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வாக்குப்பதிவு முடிந்தபின் அரை மணி




நேரம் வரை கருத்துக்கணிப்பு வெளியிட தடை தொடரலாம். இடைத்தேர்தல்கள் ஒன்றாக நடைபெற்றால், வாக்குப்பதிவு முதல் நாளில் வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல் முடிந்தபின் அரை மணி நேரம் வரை தொடரலாம்.

பல இடைத்தேர்தல்கள் வெவ்வேறு நாட்களில் நடைபெற்றால், வாக்குப்பதிவு முதல் நாளில் வாக்குப்பதிவிற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் தொடக்கம் முதல், கடைசி வாக்குப்பதிவு முடிந்த அரைமணி நேரம் வரை தொடரலாம். தேர்தல் ஆணையம், ஒரு பொது ஆணைப்படி, இவற்றை கருத்தில் கொண்டு தேதி மற்றும் நேரத்தை அறிவிக்கும்.

இந்த விதிகளின்படி ஏப்.19ம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 7 மணியிலிருந்து ஜூன் 1ம் தேதி (சனிக்கிழமை) மாலை 6.30 மணி வரை, வாக்குப்பதிவிற்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளை நடத்துவது மற்றும் அதனை அச்சு ஊடகம் அல்லது மின்னணு ஊடகம் வாயிலாக வெளியிடுவது அல்லது வேறு ஏதேனும் முறையில் பரப்புவது (அது எதுவாயினும்) தடை செய்யப்பட வேண்டிய கால அளவு என்று இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. மேற்காணும் பொதுத் தேர்தல்கள் மற்றும் இடைத்தேர்தல்கள் தொடர்பாக வாக்குப்பதிவு முடிவடைவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு 48 மணி நேரம் முன் ஏதேனும் கருத்துக் கணிப்பு அல்லது பிற வாக்குப்பதிவு ஆய்வு முடிவுகள் உட்பட, எந்தவொரு தேர்தல் விவகாரங்களையும், எந்தவித மின்னணு ஊடகத்தில் காட்சிப்படுத்துவது தடை செய்யப்படும் என்பதை இந்திய தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த விதிமுறைகளை மீறும், யாதொரு நபருக்கும் இரண்டு வருட சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து விதிக்கப்படும்.

From April 14 to June 1st, the Election Commission banned from publishing survey regarding result

தினகரன்
4 APR 2024

# தமிழகத்திற்கு 5 சிறப்பு தேர்தல் கணக்கு பார்வையாளர்கள் நியமனம்

## வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியீடு

சென்னை, ஏப்.4 : தமிழகத்திற்கு 5 சிறப்பு தேர்தல் கணக்கு பார்வையாளர்களை நியமித்து, வழிகாட்டு நெறிமுறைகளை தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மாநிலங்களில் தேர்தல் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்யவும், வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளை கண்காணிக்கவும் சிறப்புத் தேர்தல் பார்வையாளர்களை தலைமைத்தேர்தல் ஆணையம் நியமித்து வருகிறது. அதன்படி 6 மாநிலங்களுக்கு சிறப்பு தேர்தல் பார்வையாளர்களையும், 5 மாநிலங்களுக்கு சிறப்பு தேர்தல் செலவு கணக்கு கண்காணிப்பாளர்களையும் தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

அதன்படி தமிழகத்திற்கென உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த ராஜேஷ் துடேஜா, ஒடிசா மாநிலத்தை சேர்ந்த ஹிமாலினி காஷ்யப், கர்நாடகா மாநிலத்தை சேர்ந்த முரளி குமார், ஆந்திர மாநிலத்தை சேர்ந்த நீனா நிகம் மற்றும் தமிழ்நாட்டை சேர்ந்த பாலகிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு தேர்தல் கணக்கு பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருமே முன்னாள் வருவாய்பிரிவு (ஐஆர்எஸ்) அதிகாரிகள். மேலும் தேர்தல் பார்வையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகளை தலைமை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

■ முடிந்த அளவிற்கு அதிக வாக்குச்சாவடிகள் மற்றும் பதற்றமான பகுதிகளைப் பார்வையிட வேண்டும். இந்த பகுதிகளில் உள்ள மக்களோடு கலந்துரையாடுவதுடன் பதற்றமான, சிக்கலான வாக்குச்சாவடிகளை அடையாளம் கண்டு தீர்வு காணவேண்டும்.

■ வேட்பாளர்கள், அரசியல் கட்சிகளுடன் மாவட்டத் தேர்தல் அதிகாரிகள், தேர்தல் நடத்தும் அதிகாரிகள் நடத்தும் கூட்டங்களை, தேர்தல் பார்வையாளர்கள் பார்வையிடுவதுடன் கோரிக்கைகள் முறையாக கவனிக்கப்படுகிறதா என்பதையும் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

■ பாதுகாப்பு படைகளைப் பிரித்து அனுப்புவது, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களைப் பரிசோதிப்பது அரசியல் கட்சிகளின் சுவிதா இணையதளப் பயன்பாடு போன்றவற்றை முழுமையாக கண்காணித்து, அனைத்து வேட்பாளர்கள், அரசியல் கட்சிகளையும் சரிசமமாக நடத்த வேண்டும்.

■ தேர்தல் நடைமுறைகள் முடிவடையும் வரை, தொகுதி முழுவதும் சுற்றி வரவேண்டும்

■ அவரவருக்கு ஒதுக்கப்பட்ட தொகுதியில் கண்டிப்பாக இருக்க வேண்டும். மேலும் வாகனங்களில் இருப்பிடத்தைக் கண்டறியும் ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்படும்.

■ தேர்தல் பார்வையாளர்கள் தாங்கள் இருக்கும் இடம், தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி போன்றவற்றை மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு தெரியப்படுத்த வேண்டும்.

■ செல்போன், மின்னஞ்சல் வாயிலாக தொடர்பு கொள்ளும் வேட்பாளர்கள், தேர்தல் பணியில் உள்ள அலுவலர்களுக்கு உடனடியாக பதிலளிக்க வேண்டும். இது தொடர்பாக எழும் புகார்கள் மீது தேர்தல் ஆணையம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

■ அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் தேர்தல் பார்வையாளர்களுக்கான தொடர்பு அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களாக நேர்மையான நபர்களை நியமிக்க வேண்டும். இவர்கள் தேர்தல் பணியில் நடுநிலையாக செயல்படுவதுடன் கடமையில் நேர்மை மற்றும் ஒற்றுமையுடன் செயல்படுவது குறித்து அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும்.

■ வாக்குப்பதிவு நடைபெறும் நாளில், வாக்குப் பதிவு நேரத்தில் தேர்தல் பார்வையாளர்கள் ஏராளமான வாக்குச்சாவடிகளைப் பார்வையிடுவதுடன், வாக்குச்சாவடிக்கு உள்ளே காணப்படும் நிலவரத்தை அவ்வப்போது மதிப்பீடு செய்து, வாக்குப்பதிவு சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதிசெய்ய வேண்டும்.

■ மத்திய, மாநில படையினர் முறையாக பயன்படுத்தப்படுகின்றனரா, நடுநிலையுடன் செயல்படுகிறார்களா என்பதை தேர்தல் பார்வையாளர்கள் ஆய்வு செய்து எந்தவொரு அரசியல் கட்சிக்கும், வேட்பாளர்களுக்கும் சாதகமாக செயல்படாத வகையில் பாதுகாப்புப் படையினரை பணியில் ஈடுபடுத்த வேண்டும்.

5 Special Expenditure observers appointed in Tamil Nadu

தினகரன்

4 APR 2024

### பணம் பட்டுவாடா புகார் எதிரொலி

# தமிழகம் முழுவதும் சோதனையில் கணக்கில் வராத ₹4 கோடி பறிமுதல்

## வருமான வரித்துறை தகவல்

சென்னை, ஏப்.4: பணம் பட்டுவாடா தொடர்பாக வந்த புகாரையடுத்து சென்னை உட்பட தமிழகம் முழுவதும் நேற்று முன்தினம் நடந்த சோதனையில் கணக்கில் வராத ரூ.4 கோடி ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக வருமான வரித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற தேர்தல் வரும் 19ம் தேதி நடைபெற உள்ளது. இதையொட்டி பணம் பட்டுவாடாவை தடுக்க தேர்தல் பறக்கும் படையினர் மாநிலம் முழுவதும் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர். மேலும், உரிய ஆவணங்கள் இன்றி ரூ.10 லட்சத்திற்கு மேல் கொண்டு செல்லும் நபர்களின் வீடுகளில் தற்போது வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில், சென்னையில் வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக அதிகளவில் பரிசு பொருட்கள் கொள்முதல் செய்து பதுக்கி வைத்திருப்பதாக வருமான வரித்துறை கட்டுப்பாட்டு அறைக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன்படி வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று முன்தினம் ஒரே நேரத்தில் சென்னை ஏழுகிணறு சக்கரா தெருவை சேர்ந்த தொழிலதிபர் இன்துராம் வீடு, ஓட்டேரியில் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வரும் எலக்ட்ரானிக் பொருட்கள் விற்பனை செய்து வரும் தொழிலதிபர் வீடு, கொண்டிதோப்பில் தொழிலதிபர் வீடு, புரசைவாக்கம் மற்றும் கொரட்டூர், விருகம்பாக்கம் பகுதியில் உள்ள தொழிலதிபர் வீடு என மொத்தம் 5 இடங்களில் சோதனை நடந்தது.

அதேபோல், திருச்சி, செய்யாறு, தென்காசி, சேலம் ஆகிய இடங்களில் அரசியல் கட்சியினர் மற்றும் தொழிலதிபர்கள் வீடுகளிலும் நேற்று முன்தினம் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

சென்னையில் எலக்ட்ரானிக் பொருட்கள் மொத்தமாக இறக்குமதி செய்து வரும் தொழிலதிபர்கள் வீடுகளில் நடந்த சோதனை இரவு வரை நீடித்தது. அதில் விருகம்பாக்கம் பகுதியில் வசிக்கும் தொழிலதிபர் வீட்டில் மட்டும் கணக்கில் வராத ரூ.2.60 கோடி ரொக்கம், திருச்சி தொழிலதிபர் வீட்டில் நடந்த சோதனையில் கணக்கில் வராத ரூ.50 லட்சம் ரொக்கம், சேலத்தில் நடந்த சோதனையில் ரூ.20 லட்சம், தென்காசி, செய்யாறு பகுதிகளில் இருந்து கணக்கில் வராத பணம் என மொத்தம் ரூ.4 கோடி ரொக்கம் மற்றும் முக்கிய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக வருமான வரித்துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Income Tax department informed that an amount of Rs. 4 Crore was seized in raid across Tamil Nadu

தினகரன்

4 APR 2024




## வாக்காளர் பட்டியலில் இருந்து

# 485 பேரின் பெயர் மாயம்

திருவொற்றியூர் பகுதியில் பட்டியலில் இருந்து 485 வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம் தெரியாததால் அப்பகுதி மக்கள் குழப்பம் அடைந்துள்ளனர்.

சென்னை திருவொற்றியூர் சார்லஸ் நகர் பகுதியில் உள்ள 400க்கும் மேற்பட்ட வாக்காளர்களின் பெயர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதால் வாக்காளர் அடையாள அட்டையை வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த 2022 கவுன்சிலர் தேர்தலில் சார்லஸ் நகர் பகுதியில் 163, 164 ஆகிய பூத்தில் 911 வாக்காளர்கள் வாக்களித்தனர்.

தற்போது 2024 நாடாளுமன்ற தேர்தல் வாக்காளர் பட்டியலில் இருந்து 163, 164 பூத்தில் 485 வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட வாக்காளர்கள் அனைவருமே தற்போது வரை அதே விலாசத்தில் சொந்த வீட்டில் வசித்து வருகிறார்கள். இவர்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதற்கான காரணம் தெரியாததால் நாடாளுமன்ற தேர்தலில் வாக்களிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து திருவொற்றியூர் தொகுதி தேர்தல் அதிகாரியிடம் பாதிக்கப்பட்ட மக்கள் புகார் கொடுத்துள்ளனர். மேலும் வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டதால் அந்த குடும்பங்களைச் சேர்ந்த எவரும் இந்த தேர்தலில் வாக்களிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

Names of 485 people missing from the voter list in Tiruvottiyur area.